
# சில்லரைக்களஞ்சிய
# நாடகப்பொக்கிஷம்

ண்டாம் பாகம்

29 JAN 1932



காப்பி
ரைட்.

விலை
அணா 3

0-,8

வ. முஹையதீன் அப்துல் காதிறு
ாப் புதுமண்டபம், மதுரை.

உ
சுகமயம் மிதயம்.

9 JAN 1932

தற்காலம் எல்லா ஆக்டர்களும்
டிராமாக்களில் படித்து நடித்து வருகிற

# சில்லரைக் களஞ்சியம்

என்னும்

# நாடகப் பொக்கிஷம்.

(இரண்டாம் பாகம்.)

இஃது
மதுரை செந்தமிழ் வித்வான்
சந்தச் சரபம்
ராஜா S. S. ஷண்முகதாஸ் அவர்கள்
இயற்றியது.

மதுரை புதுமண்டபம், புத்தக வியாபாரம்,
ஸ்ரீமான் ஏ. ந. வ.
முஹையதீன் அப்துல் காதிறு
அவர்களால்
மதுரை, ராஜா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 8-12-31. [விலை அணு 3.

உ

மதுரை செந்தமிழ் வித்வான்

சந்தச் சரபம்

## ராஜா S. S. ஷண்முகதாஸ்

உபாத்தியாயர் அவர்களால் இயற்றப்பெற்று

தற்காலம் எல்லா ஆக்டர்களும் டிராமாக்களில்

படித்து நடித்து வருகிற

## சில்லரைக் களஞ்சியம்

என்னும்

# நாடகப் பொக்கிஷம்.

2132
791.0954

இரண்டாம் பாகம்.

காப்பு.

பாடலி னன்பு மீறிப்
பக்தர்கொண் டாடும் ஞானக்
கூடலம் பதியை யாக்ஷிக்
கொண்டருட் சுந்த ரேசன்
ஆடலைக் கவிதை யாக்கி
யளித்துயர் கலைச்சொல் லாலே
நாடகப் பொக்கிஷ மீதை
நவின்றிட முன்னேன் காப்பு.

67901

## அழகுவின் இரண்டாவது பாட்டு.

(2) ஆமாம் இந்த ராசாபையன் என்ற மெட்டு.

ஒரே—சூத்திவா சூத்திவா வாண்டுக்கு
ஜோக்குபுட்டி யக்காவெனக
சுட்டுத்தாண்டு பூவுனுவேசி
நூ வாடசூசி
சுட்டுனுபட்டி யீடுரா லேசி (சூ)

சூசே—மூத்தினுசூடு கோத்திவேல
ஆத்திரமொாஸ் தாந்தி—தீனி
மோஸ்குனுண்டி யெவுருகண்டிந்தி—ஆக்
கடுப்புலோ யிந்த
மொன்னுவேசிமூய வால்சிந்தி
நைஞ—ஜகடமொச்சு
வெனக—சங்கட்டமொச்சு
நாக்கு—கோப்பமொச்சு
டப்புக்கு—கருசுவொச்சு—கனுகோ
விந்துனுஒத்து—யேமினுவொத்து
மன அக்கனி பினுவு
வீட்சுக்கோனி இண்டிக்கிபோத்தாம்
பினுரா சூத்தாம்
பினுரா சூத்தாம்

---

## அழகு முதல்முதல் பாடிவரும் தமிழ்ப் பாட்டு.

(3) கோடிப்போயிந்தே அக்கம்மா என்ற மெட்டு.

தோ—வந்து விட்டேண்டா—நைனா
வந்து விட்டேண்டா—நைனா
வளைஞ்சி கிளஞ்சிச்
சந்துலே பூந்து (வந்து)

நைனா—இந்தப்பயல் யாரு—கேள்
என்னாயிவம் பேரு—அதை
எந்தனுக்கு கூறு—இப்போ
எனக்குநிக ராரு (வந்து)

வேண்டாம்—இவனைப்போகச் சொல்லு—இவ
னெதுக்கிளிக்குராம் பல்லு—தோ
அவனைப்போயி கொல்லு—நீ
அவசரமாய்ச் செல்லு (வந்து)

நைனா—எங்கேசமைய லாளு—எனக்
கேங்கொடுக்கலே பாளு—நீ
அங்கேபோயின் னாளு—அதை
அவசரமாய்க் கேளு (வந்து)

தோ—வெளிச்சமொண்ணு போலே— நம்ம
விருந்துக்குமுன் னாலே—இப்போ
பளிச்செனவிக் காலே—ரெம்பப்
பகட்டுதேயார் வேலே (வந்து)

நைனா—கூட்டமென்ன யிங்கே—நாம்
கோறிவந்தது யெங்கே—நல்ல
வாட்டமாக வங்கே—போய்
வாங்கணும்நம் பங்கே (வந்து)

---

## வள்ளி சரித்திரத்தில்

## வள்ளிக்கும் வேடனுக்கும் தர்க்கம்.

(4) கிழக்கேமானம் வெளுத்துப்போச்சே என்ற மெட்டு.

வ— எங்கள் திணைப்—புனத்திற்குள்ளே
எவரது—ஓடுறது
என்னவது—தேடுறது
எந்தசாமி—ஆடுறது
இயப்புங்கா—ணுமிப்போது

வே— தேடுவது—வொன்றுமில்லை
வேள்வி—மலையிலே
இருந்தேன்—வலையிலே
புகுந்திவ்—வழியிலே
திரும்பிய—மானைக்காணவே

வ— மான்தேட—மேலேவிழுந்து
மனுஷரை—பிடிப்பதோ
அதுமான்—பிடிப்பதோ
இதுதான்—நடிப்பதோ
மதியற்றதுணைத்தா—னென்பதோ

மான்போன—வேகத்திலே
துயர்ந்தேன்—பின்னாலே
குறையில்லை—என்னாலே
பார்க்கலை—முன்னாலே
மதியற்றுநான்—மேல்விழலே

## (5) வேடனுக்கும் வள்ளிக்கும் தர்க்கம்.

சக்கரைப்பெண்ணே சேக்கச்சிவந்த சிங்காரி என்ற மெட்டு

வே— காடுகொண் டாடுநல்
வேடுவ நம்பியின் களியே
கன வொளியே
காமக் கிளியே—வுந்தன்
கானலுக் குள்ளொரு
மான்வந்ததா சொல்லிவ் வழியே
வேண்டாம் பழியே

வ— மானென்று தானின்று
ஞானங் கெட்டுப்பேசும் வேடா
பித்த மோடா
மதி கேடா—நல்ல
மானென்றால் மானுக்க
டையாளங்களில்லை யோடா
வல்லை போடா

வே— காமக்கலவிக்குள் ளேமிக்கச்
ஷேமிக்குங் கரும்பே
வனத் தரும்பே
மனந் திரும்பே—சும்மா
கண்ட மட்டும்பேசக்
கொண்ட கொள்கையென்ன விரும்பே
யோகப் பாம்பே

வ— எத்தனை யோமான்கள்
யித்தனை கொல்லையில் வருந்தான்
சந்தந் தருந்தான்
அடி பெருந்தான்—அதில்
எந்தமா னென்றுயான்
வுந்தனுக்கோதுவே னிதந்தான்
நல்ல விதந்தான்

வே— மானுக்கு மானைசைத்
தானகவே யுள்ளங் கொள்ளுமான்
மதி தெள்ளுமான்
ஓசைத் துள்ளுமான்—அதன்
மார்பினிலேரெண்டுக்
கெரம்புண்ட தின்பெயர் வள்ளிமான்
ஞானப் புள்ளிமான்

ஆளைக் குறித்தடை
யாளங்க ளோதுவ தடமா
நெஞ்சித் திடமா
சொல்வி கடமா—எந்தன்
அண்ணார்களையழைப் பேனிதை
எண்ணிக்கொள் மடமா
யிது தடமா

(நாகூராண்டவனே காதரோலியே என்ற மெட்டு)

## வஞ்சிபத்தன் பாட்டு.

(6) ஐயையோசிலம்பு போனதற்கு—இங்கே
யாரைநோக வகையிருக்கு—எல்லாந்
தெய்வச்சோதனை யாகுமிதற்கு—எந்தன்
ஜீவன் போகப் பயந்திருக்கு—நான்

பிள்ளைக் குட்டிக்காரன்
பெருத்த சமுசாரி—எனக்கு
கொள்ளைநில முண்டு—அதற்குங்
கூடக்கட னுண்டு—ஐயையோ

வாயிதாவும் சாயந்திரம்வரை
இன்றோடே யிந்த
வஞ்சித்தலை வாளுக்குயிரை (ஐயோ)

ஆனாலிச் சிலம்பு யென்னுடைய தல்ல—பார்க்க
அதனைப்போலத்தானி ருக்குது சொல்ல—இப்போ
நானுமிங்கிவனை யேமாத்தி மெல்லக்—கொண்டு
ராஜாமுன்னிலையில் சோக்கிறேன் கொல்ல—இவன்

திருடிவிட்டா னென்று—நான்
செப்பி யங்கு நின்று—ஒரு
காடிவிட்டு யின்று—உயிரைக்
காப்பாத்தமு யன்று—பார்ப்போம்

என்னமோநான் ஆச்சாரிப்பிள்ளே
இப்படி பிரட்டும் முருட்டும்
என்னிடமுண் டேகமாயுள்ளே (ஐயோ)

## லலிதாங்கி சரிதையில்
## மடத்தாட்சி பாடிவரும் பாட்டு.

(இன்னு மென்னுதானுதுமோ இந்த நாட்டிலே என்ற மெட்டு)

(7) பட்டத்துயர் கொஞ்சமல்ல அங்கே சென்றுநான்
பாதவித்த தென்ன சொல்ல எனம்மம்மா

நீங்க—இட்டப்படி சன்யாசிப் போல்
இங்கேயிருந்து சென்றதும்போதும்—அந்த
அட்டகாச துரையிடத்திலிந்
தாச்சி பட்ட பாடும் போதும் (பட்)

என்னைக்—கண்டதும் சுவாமி வாருங்களென்றிரு
கையெடுத்துக் கும்பிட்டிட்டார்
நான்—கொண்டுபோன லெட்டரைப்பார்த்துக்
கோபித்தடித்துத் துரத்திட்டார் (பட்)

ஐயோ—எங்கெல்லாமோ பாராக்காரர்
யிருக்கின்றா' ரதுவொருவிதம்
அய்யோ—அங்கேயிருக்கும் காவலோ அடே
யப்பா அது பலவிதம் (பட்)

67901

## லலிதாங்கியின் சேடிகள் கூறுதல்.

(8) (சூழ்ந்துசர்க்கார் சுற்றுவோம் என்ற மெட்டு)

நாங்கள் போகோம்—அழகாபுரி
நாட்டுக்குள்ளாலே—அம்மா (நா)

ததி—தாங்களெங்களைக் கோபித்திடுவதில்
சாரமென்ன வீரமன்ன
நாரிடத்தில் கூறி வின்று (நா)

கல்யாண மென்ற யிச் சொல்லவர்
காதினில் கேட்டால் கொலைகல்
துணிந்து—செல்வோமென்றாலோ யிங்குளங்களின்
சிந்தையது நொந்திடுதே
எந்த விதம் முந்திடுவது (நா)

---

## அரசனிடத்தில் குடிகள் முறையிடுதல்.

(இன்னு மென்னதாகுமோ இந்த நாட்டிலே என்ற மெட்டு)

(9) இது—என்ன அனியாயமையா—ஐயோமகராசா
இதுயேதுவநி யாயமையா—இந்த நாட்டிலே-(என்)
சின்னபின்னஞ் செய்துமெங்களைத்
தெருத்திதெருத்தி விரட்டுது—நாங்கள்
பொன்னுய்வளர்த்தப் பயிரையெல்லாம்
பிடுங்கிப் பிடுங்கி போடுதுயிது (என்)

கஞ்சிகலயத்தை வச்சிட்டுப்போனு
கலக்கி குடிச்சிட் டோடுது—இங்கே
கொஞ்சம்பொழுது வதிகரித்தால்
கூக்குறல்களைப் போடுதுயிது (என்)

இப்பதான்வெத்திலைச் சருகுவாங்க
எடுத்தடிவச்சேன் வெளியிலே—அப்போ
குப்புனுபாஞ்சோர் புலிவேட்டியைக்
கொன்டேபூட்டுது தெறியலே

---

## வேறு பாட்டு குடிகள் குறைகூறல்

(சோல்லி சோல்லி என்னை ஏமாத்தவோ என்ற மெட்டு)

(10) போதும் போதுமிங்கே—வாழ்ந்ததின் செட்டு
நாங்க—போரோம் போரோமிந்த—வூரையே விட்டு
ஏது—எங்களாலே முடியாதுங்கோ
இங்கே—இனிமேலிருந்தாக்கா விடியாதுங்கோ

நாங்க—பாடுபட்டு யிட்ட
பயிறுகளைத் துட்ட
மிருகம் வந்து நட்டம
தாகசெய்து விட்ட—படியால்

என்னத்தான் செய்யச் சொல்றீங்கோ மகாராஜாதாங்கள்
ஏதைத்தான் செயச் சொல்றீங்கோ
நீங்க சொல்லுங்கோ

செந்நாய்க் காடியும் சிங்கங்களும்—எங்கள்
முன்னாலே வந்துகூத் தாடுதையா—யிது
என்னடா கஷ்ட்டமென் றோடையிலே
அது—பின்னால்து றத்திவருகுதையா 67901

ஐயா—ஒண்ணு ரெண்டா ஆய்யா
ஒன்போது பத்தா ஐயா
என்—னென்று சொல்வேனையா
ஏதென்று சொல்வேனையா

ஐயா—காப்பாத்து நன்னா காப்பாத்துங்கோ
இல்லாபோனாக்கா யிக்
காட்டைவிட்டு போரோமுங்கோ
நீங்க சொல்லுங்கோ

## பள்ளி பிள்ளைகளில் விகடப்பிள்ளையின் பாட்டு.

(11) வெள்ளாடுவோம் வாங்கடா
எல்லோருங் கூடி (வெ)

பொள்ளாதது பள்ளிக்கூடம்
போகக்கூ டாதினிமேல்
சொள்ளாமல் சொள்ளிப்போட்டேன்
சூச்சியத்தை அரிஞ்சிக்கிட்டு (வெ)

வாத்தியாரு கெட்டவரு
வையிராரு திட்டுராரு
சாத்தியா அடிக்குராரு
சம்பளத்தை அம்பக்பண்ணிட்டு (வெ)

அண்ணைக்கி என்னையடிச்சார்
அதன்பிற குனையடிச்சார்
இண்ணைக்கி யவனையடிச்சார்
இனிமேலிதற்கு போகவேகூடாது (வெ)

---

## குறத்தியை, அர்ஜுனன் மருந்துகேட்கின்ற பாட்டு. தர்க்கம்.

அ—ஆஹா—அப்படியா எங்கே அந்த
மருந்தெனக்குத் தாவேன்

கு—ஆ—ஆசை யாசை யெனக்கு நீயுன்
ஆடைகளைத் தாவேன்

அ—ஆமாம்—அதுபலியா விட்டாலதற்க்
கென்ன செய்வது

கு—அடே—அப்படிக்கெல்லாம் சந்தேசமிருந்தா
வேண்டாமுனக்கது

அ—சரி—கோபங்கொள்ளாதே யுனது
குடியிருப் பெங்கே

கு—நான்—குடியிருப்பது கொல்லிமலைக்
கூமாச்சிக் கங்கே

அ—அங்கே—நல்லது பின்னாடிவந்து
நானழைக்க பேர் கூர்

கு—வந்து—ராமக்கா ளென் றேயழைத்தா
நான் வருவே நேர்

---

## டிராமாக்களில் பபூன்கள் பாடுகிற
## புதிய ரயில்வண்டிப் பாட்டு.

தன தானனனான னானன னானே தானே
தன தன்னா னானே
தானனனான னானன னானே தானே

என்ற தெம்மாங்கு மெட்டு—தாளம்-ஏகம்.

ஐயா—போகுது பாருங்கோ மெட்ராசுக்கேநேரா
நம்ம ரயிலுவண்டி
போகுதுபாருங்கோ மெட்ராசுககேநேரா (போ)

ஆகவேண்டியக் காரியாதி
யல்லாத்தையு முடித்துக்கொண்டு
ஏகப்பட்ட டிக்கட்டைக்கொடுத்து
இடவழியிலே சோதித்துப்பார்த்து (போ)

அணியணியாய் வண்டியைப்பூட்டி
அதிலேயேக ஜெனத்தைக்கூட்டி
துணிவதாக யெஞ்சினைமாட்டி
சுருசுருப்பாய் புகையைமூட்டிப் (போ)

மணியடித்து பிகுல்கொடுத்து
மாறுதுபின் சாவியனுப்பி
பிணியுறுது டெல்லிபோன்பேசி
பிறகும்பச்சைக் கொடியைவீசி (போ)

உப்புமாயிட்டலி காப்பிகளையதின்
வுள்ளேயேயெல்லாம் வாங்கிசாப்பிட
இப்படியாக கெடிக்கிகெடி
இருந்து இருந்து வேகமாகப் (போ)

நாலாவூரு செனத்தையுமது
நடுவழியிலே யேத்திக்கொண்டு
ஜோலார்ப்பேட்டை ஸ்டேஷனைத்தேடி
சுருசுப்பாய் சக்கரமோடிப் (போ)

அல்லும்பகலும் அறுபதுநாழியும்
அந்தந்தநேரத்தி லந்தந்தவூருக்கு
சொல்லுராஜாஷண்மு கன்தமிழைப்போலே
துயர்ந்ததுதண்ட வாளத்தின்மேலே (போ)

## அல்லி சரித்திரத்தில் முத்துவணிகன் புலம்புகின்றது.

வண்டிமேலே மண்டிபோட்டு வடக்கே பார்க்க போர தம்பி என்ற தெம்பாங்கு மெட்டு.

ஐயையோ மீனாக்ஷி தாயே—அந்த
அல்லி மகா ராஜாணிக்கி நான்
செய்யாதக் குற்றமொன்றைச்
செய்தவனு யாகிட்டதே
முத்தாலே—ஐயையோ
முத்தாலே—ஒருபடி
முத்தாலே

பிள்ளைகுட்டி காரனுச்சே—எனக்கு
பேசனுவுங் கூடலேயே
எள்ளளவுங் குற்றஞ்செய்யாமல்
இந்தவிதி வந்திட்டதே
முத்தாலே—ஐயையோ
முத்தாலே—ஒருபடி
முத்தாலே

வுயிர் போனுற் போகுதையா—பாழும்
வுடலும் போனுல் போகுதையா—என்
பயிர்ப்பச்சைகளெல்லாம்விளைந்து
பாழாய்ப் போகுமே யென்று பார்க்குரேன்
முத்தாலே—ஐயையோ
முத்தாலே—ஒருபடி
முத்தாலே

கடன் கொடுக்கப் பேரிடத்தில்—பாவிநான்
கையெழுத்தும் வாங்கலேயே—இப்போ
படபடத்துச் செத்தால் அந்தப்
பணத்தை வாங்க ஆருமில்லையே
முத்தாலே—ஐயையோ
முத்தாலே—ஒருபடி
முத்தாலே

---

முத்துச்செட்டி அர்ச்சுனனைக் கேட்கிறது.

ஆவாரம் பட்டைவெட்டி என்ற தெம்மாங்கு மெட்டு.

ஆரையா சொல்லுங்க நீங்க
ஆண்வாடைக் கூடாத யிந்த
அல்லிராணி தேசத்துக்குள்ளே
வந்ததெப்படி
ஆக்கினையிங் குண்டுமே கொள்ளே.

கண்டாக்கா சும்மாவிடாங்கோ
நின்டாக்கா யாரும் பாப்பாங்கோ
காணாமலூர்ப் போயிச்சேருங்கோ
காதிலே கேட்டால்
கட்டாயம் பத்து நேருங்கோ

இவ்வுலக வாழ்க்கையே
இருப்பதாய் நிக்ஷய மில்லே
இங்கே வந்தித்துயராகவா
போங்கயா பாவம்
யேகமோக மாகிநோகவா.

இரண்டாம்பாகம் முற்றிற்று.

67901

4B 3/1253

தேசாபிமானிகள் மாலை யென்னும்

# ஸ்ரீ மகாத்மா காந்தி அம்மானை.

என்ற புஸ்தகத்திலுள்ள கருத்துக்களை இங்கே கொஞ்சம் எழுதுகிறேன். அதாவது நமது சுதேச இந்து முஸ்லீம் ஒற்றுமையால்வரும் மேன்மையைத் தெரியும்படியான விதமும், இப்பேர்க்கொற்ற மகாத்மா காந்தி ஏழைமக்களுக்காக ஒவ்வோர் ஊர்களிலும் பட்ட கஷ்டம், நஷ்டம், கல்லாலடி, மயக்கம், ஓடி ஒழிந்தது, சில உத்தமர்களால் பாதுகாக்கப்பட்டு, வெள்ளையர்களால் நேர்ந்தகொடுந்துன்பங்களை சகித்தது மகாத்மா காந்தி மாருவேடம் பூண்டு உயிரைக் காப்பாற்றியதுமான பேதாபேதங்களை எளிய நடையில் 54-பக்கம்வரை பாடியிருக்கும் புத்தகத்தை வாங்கிப்படிக்கும்போது பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும் ஆண், பெண் யாவர்களுக்கும் பயமும், சந்தோஷமும், அழுகை முதலிய விதங்களும் நேரும். நல்லதங்காள் கதை, பஞ்ச பாண்டவர் வனவாசம் முதலிய பாடல்களைப் போல் பாடவேண்டியது. புஸ்தகம் வேண்டியவர்கள் அணு எட்டு மணியார்டர் செய்தால் புஸ்தகம் ஒன்று ரிஜிஸ்டர் செய்யப்படும்.

ஸ்ரீமான், ஏ. ந. வ.

☞ முஹைறயதீன் அப்துல் காதிறு.

புக் ஷாப், புதுமண்டபம், மதுரை.

ராஜா பிரஸ், மதுரை;—31.